# DEPOSITION OF WITNESSES
# BEFORE THE HON'BLE PRINCIPAL SUB JUDGE
# AT PUDUCHERRY

## MCOP. NO.79/2023

## DEPOSITION OF PW1

| | |
|---|---|
| NAME | : Murugan |
| FATHER'S NAME | : |
| VILLAGE | : |
| PROFESSION | : |
| RELIGION | : |
| AGE | : |

Solemnly affirmed in accordance with the provisions of act X of 1873 on the 08.09.2025

3ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

விபத்து சமயத்தில் நான் மரக்கானத்தில் இருந்து புதுச்சேரி நோக்கி வந்து கொண்டிருந்தேன். விபத்தின் போது நான் பல்சர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தேன். தலைக்கவசம் அணிந்திருந்தேன். விபத்தின் போது என் தம்பி பின்னால் அமர்ந்து வந்தார். இது தொடர்பாக வேறு ஏதேனும் இழப்பீடு வழக்கு போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரே வந்த வாகனத்தினால் விபத்து ஏற்படவில்லை என்றும் என்னடைய அஜாகிரைத்தையால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றால் சரியல்ல. என்னுடைய சம்பளம் ரூபாய் 35 ஆயிரம் என்பதற்கு ஆவண ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்டது சொற்ப காயம் என்றும் வழக்கிற்காக அதை மிகப்படுத்தி காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து என்னுடைய அஜாகிரைத்தால் ஏற்பட்டுள்ளது என்பதால் 3ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு தர தேவையில்லை என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் யாரிடம் இழப்பீடு கேட்கிறேன் என்றால் என்னுடைய வண்டி காப்பீடு நிறுவனத்தின் மீது இழப்பீடு கேட்டுள்ளேன். இந்த விபத்திற்கு யார் காரணம் என்றால் எதிரே வந்த வண்டிதான் காரணம். எதிரே வந்த வண்டியின் காப்பீடு நிறுவனம் எனக்கு பணம் கொடுக்க வேண்டுமா என்றால் ஆமாம். என்னுடைய வண்டியின் காப்பீடு நிறுவனத்தின் மீது நான் இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் இடித்தவர்கள் மீதுதான் இழப்பீடு கேட்டுள்ளேன்.